## யூன் – 25 – திங்கள்
### புனித வில்லியம்ஸ்

**உம் அன்பர்கள் விடுதலை பெறுமாறு, உமது வலக்கரத்தால் எங்களுக்குத் துணை செய்யும்.: திபா. 60:5**

### முதல் வாசகம் : 2 அரசர் 17 : 5 – 8, 13 – 15, 18

அக்காலத்தில் அசீரியா மன்னன், நாடுமுழுவதன் மேலும் படையெடுத்து, சமாரியாவுக்குவந்து, அதை மூன்றாண்டு அளவு முற்றுகையிட்டான்.ஓசேயா ஆட்சியேற்ற ஒன்பதாம் ஆண்டில், அசீரியா மன்னன் சமாரியாவைக் கைப்பற்றி, இஸ்ரயேலரை அசீரியாவுக்கு நாடுகடத்தினான். அவர்களை அலகிலும், கோசானின் ஆபோர் நதிக்கரையிலும், மேதியர் நகர்களிலும் குடியேற்றினான். ஏனெனில், இஸ்ரயேல் மக்கள் தங்களை எகிப்து நாட்டினின்றும் அந்நாட்டு மன்னன் பார்வோனின் கையினின்றும் விடுவித்திருந்த தங்கள் கடவுளான ஆண்டவருக்கு எதிராய்ப் பாவம் செய்து வேற்றுத் தெய்வங்களைத் தொழுதுவந்தனர்.மேலும் இஸ்ரயேல்மக்கள் முன்னிலையிலிருந்து ஆண்டவர் விரட்டியடித்த வேற்றினத்தாரின் விதிமுறைகளின்படியும். இஸ்ரயேல் அரசர்கள் புகுத்திய வழக்கங்களின்படியும் நடந்துவந்தனர்.ஆயினும் ஆண்டவர் எல்லா இறைவாக்கினர், திருக்காட்சியாளர் மூலம் இஸ்ரயேலுக்கும் யூதாவுக்கும் விடுத்திருந்த எச்சரிக்கை இதுவே. "உங்கள் தீயவழிகளை விட்டுத்திரும்புங்கள். உங்கள் மூதாதையருக்கு நான் கட்டளையிட்டு என் அடியார்களாகிய இறைவாக்கினர் மூலம் நான் அறிவித்த திருச்சட்டத்தின்படி என் கட்டளைகளையும் நியமங்களையும் கடைப்பிடியுங்கள்". ஆனால் அவர்களோ செவிகொடுக்கவில்லை. அவர்கள் மூதாதையர் தங்கள் ஆண்டவர்மீது நம்பிக்கை இழந்து பணிய மறுத்ததுபோல, அவர்களும் வணங்காக் கழுத்தர்களாக இருந்தனர்ஆண்டவரின் நியமங்களையும், தங்கள் மூதாதையரோடு அவர் செய்திருந்த உடன்படிக்கையையும், தங்களுக்கு அவர் விடுத்திருந்த எச்சரிக்கைகளையும் புறக்கணித்த, வீணானவற்றைப் பின்பற்றி வீணர் ஆயினர் "வேற்றினத்தாரைப் பின்பற்றலாகாது" என்று ஆண்டவர் இட்டகட்டளைக்கு மாறாக, தங்களைச் சூழ்ந்திருந்த அவர்களைப் பின்பற்றி நடந்தனர்.எனவே ஆண்டவர் இஸ்ரயேலின்மேல் மிகவும் சினமுற்று, அவர்களைத் தம் திருமுன்னின்று தள்ளி விட்டார். யூதா குலத்தார் மட்டுமே எஞ்சியிருந்தனர்.

**பதில்பாடல் :** எங்களுத் துணை செய்யும் ஆண்டவரே
எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.

### நற்செய்தி : மத்தேயு 7 : 1 – 5

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களுக்குக் கூறியதாவது பிறர் குற்றவாளிகள் எனத ' தீர்ப்பு அளிக்காதீர்கள் அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாகமாட்டீர்கள்.நீங்கள் அளிக்கும் தீர்ப்பையே நீங்களும் பெறுவீர்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ, அதே அளவையாலே உங்களுக்கும் அளக்கப்படும்.உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையைப் பார்க்காமல் உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணில் இருக்கும் துரும்பை நீங்கள் கூர்ந்து கவனிப்பதேன்?. அல்லது அவரிடம், "உங்கள் கண்ணிலிருந்து துரும்பை எடுக்கட்டுமா?" என்று எப்படிக் கேட்கலாம்? இதோ! உங்கள் கண்ணில்தான் மரக்கட்டை இருக்கிறதே!. வெளிவேடக்காரரே, முதலில் உங்கள் கண்ணிலிருந்து மரக்கட்டையை எடுத்தெறியுங்கள். அதன்பின் உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணிலிருந்து துரும்பை எடுக்க உங்களுக்குத் தெளிவாய்க் கண்தெரியும்" என்றார்.

**தியானம்:** இன்று எம்மத்தியில் வெளிவேடமான வாழ்வானது தலைதூக்கி நிற்கின்றது. அன்று பரிசேயரையும், சதுசேயரையும் பார்த்து "வெளிவேடக்காரரே உங்களுக்கு ஐயோகேடு" என்று இயேசு கூறுகிறார். இன்று நாங்கள் வாழும் வாழ்வைப் பார்த்து எங்களுக்கும் "ஐயோகேடு" என்று வெளிப்படையாகக் கூறுகின்றார். ஏனென்றால் மற்றவர்கள் எங்களை மதிக்கவேண்டும், நல்லவன் என்றோ அல்லது நல்லவள் என்று சொல்லவேணடும், நாங்கள் செய்வதுதான் சரிமற்றவர்கள் செய்வதெல்லாம் பிழயான செயல் என்றெல்லாம் குறைகூறி தீர்ப்பிட்டுக்கொண்டே இருக்கின்றோம். "உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையை எடுத்துவிட்டு அதன் பின் உன் சகோதரன் கண்ணில் இருக்கும் துரும்பை எடுத்தெறியுங்கள்" (மத்.7:5).ல் இவ்வாறு பார்க்கின்றோம். நாங்கள் எவ்வாறு வாழ்கின்றோம், என்ன செய்கின்றோம், அவை சரியா? தவறா? ஏன்று சிந்தித்துப் பார்ப்பதில்லை. காரணம் தான் செய்வதுசரி என்று குறிப்பிட்ட வாழ்க்கை வாழ்வதால் வேறு எதற்கும் இடம் கொடுப்பதில்லை. ஆனால் மற்றவர்களைத் தாழ்த்தி குறை கூறி என்னை உயர்தியவனாக, அவர்களின் மனம் நோகப்பண்ணி வெறுத்து ஒதுக்கிவாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இவ்வாறு வாழ்ந்தால் நாங்கள் செய்யும் வழிபாடுகளும், செபமாலைகளும், திருப்பலிகளும் உண்மையானதாக அல்லாமல் வெளிவேடமானதாகவே காணப்படும். எனவே நான் என்ற பெருமிதமான வாழ்வு வாழாமல் நாங்கள் என்ற மகிழ்ச்சியான உன்னதவாழ்வு வாழ வரம் வேண்டுவோம்.